சட்டப் பேரவைத் தலைவராக நீங்கள் இருக்கின்ற இந்தக் காலத்தில், சட்டப் பேரவையில் பல நல்ல மரபுகளை ஏற்படுத்தி, ஒரு நல்ல சட்டப் பேரவைத் தலைவராக விளங்குவதற்கான மரபுகளை ஏற்படுத்தி, நீங்கள் நல்ல பெயரை வாங்க வேண்டும் என்று நான் வாழ்த்துத் தெரிவித்துக் கொள்வதோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தங்கள் வாழ்க்கையில், தங்கள் அரசியல் வாழ்க்கையில், மேலும் பல சிறப்புகளைப் பெற்று, வாழ்வாங்கு வாழ வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு என்னுடைய பிறந்த நாள் என்பதை, சாதாரணமாக நான் எந்த நேரத்திலேயும் நினைத்து, விழா கொண்டாடுகிற வகையிலோ அல்லது அதை நினைத்து இதை ஒரு பெரிய சிறப்பாக எடுத்துக்கொள்கிற வகையிலோ, இதுவரையிலும் நான் என்றைக்கும் என்னுடைய வாழ்நாளில் அமைத்துக் கொண்டதில்லை. ஒரு 46 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு குக்கிராமத்தில் இந்த நாளில் பிறந்தேன் என்பதைத் தவிர செயற்கரிய பல காரியங்களைச் செய்து மறைந்து இருக்கிற பல பெரியார்களுடைய பிறந்த நாட்களைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற நமக்கு இது ஒரு பெரிய சிறப்பான நாள் என்று நான் கருதியதில்லை. ஆனால் மாண்புமிகு முதலமைச்சர், புரட்சித் தலைவி அவர்களே, என்னை வாழ்த்துகிற இந்த நல்ல வாய்ப்பைப் பெற்று இருக்கிறேன் என்று சொன்னால் (மேசையை தட்டும் ஒலி) அதுதான் இந்த 46 ஆண்டுகளில் நான் பெற்றிருக்கிற பேறுகள் அத்துனையிலேயும் சிறந்த பேறு என்று நான் கருதுகிற சூழ்நிலையில் இருக்கிறேன். அந்த வகையில், என்னை இந்த அளவிற்கு உயர்ந்த இடத்தில் அமர்த்திய புரட்சித் தலைவி அவர்களே, இன்றைக்கு வாழ்த்துகிற வாய்ப்புப் பெற்று இருப்பது எதிர்காலத்தில் நான் என்ன வாய்ப்புப் பெற்றாலும் அது அவர்கள் இன்றைக்கு இருந்து வாழ்த்திய இந்த வாழ்த்துரைக்கு மிகுதியாக இருக்காது என்று நான் கருதுகிறவன். அந்த வகையிலே, இந்த உயர்வுக்கெல்லாம் காரணமான புரட்சித்தலைவி அவர்களுக்கே என்னுடைய இந்த வாய்ப்பு பெற்றதற்கான நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

முற்பகல் 9.35

2. வினாக்கள் - விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **வினாக்கள்-விடைகள்: வினா எண். 148. திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.**

1991 அக்டோபர் 4]

148— பேராவூரணியில் நீதிமன்றம்.

*1182, திரு. ஆர். சிங்காரம் :
மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணியில் சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும், முன்சீப் கோர்ட்டும் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

பேராவூரணியில் குற்றவியல் நீதிமன்றம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு சென்னை உயர்நீதி மன்றத்தின் பரிசீலனையில் உள்ளது. அங்கு மாவட்ட முன்சீப் கோர்ட் ஒன்று அமைப்பது பற்றிய செயற்குறிப்பானை சென்னை உயர்நீதிமன்றம் 1987 ஆம் ஆண்டில் அரசின் ஆய்விற்காக அனுப்பியது. அதனைப் பரிசீலனை செய்த பின்னர் 1990 ஆம் ஆண்டில் அரசு அதனை பின்னால் செயல் படுத்தலாமென தள்ளி வைத்தது. எனவே சென்னை உயர்நீதி மன்றத்தால் இது மீண்டும் பரிசீலனை செய்யப்பட்டது. 1990 ஆம் (30—4—90) ஆண்டில் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை தனியாக ஒரு மாவட்ட முன்சீப் கோர்ட் அமைப்பதற்குப் போதுமானதாக இல்லை. நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை கூடும்போது இது குறித்த செயற்குறிப்பினை சென்னை உயர் நீதிமன்றம் அரசுக்கு அனுப்பும்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கேள்வி நேரத்தின்போது எனக்கு ஒரு பெரிய பாக்கியம் கிடைத்ததாக எண்ணி, நான் தயாராக இருந்தேன். எதையும் புத்திசாலித்தனமாக, திறமையாக முந்திக்கொண்டிருக்கிற நம்முடைய புரட்சித் தலைவி, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலும் மிகத் திறமையான முறையில் சிறப்பான முறையில் இங்கே நம்முடைய பேரவைத் தலைவரை வாழ்த்தி பாராட்டியதிலே, நானும் அதில் கலந்து அவரைப் பாராட்டி, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பதிலளித்தார்கள். பேராவூரணி என்பது ஒரு பள்ளத்தாக்கைப் போன்ற ஊராகும். மிக மிகப் பின் தங்கிய பகுதியாகும். ஆகவே அப்படிப்பட்ட பகுதி மக்கள் பட்டுக்கோட்டைக்குத்தான் கோர்ட்டிற்கு எல்லாம் வர வேண்டும். அது 40 கிலோ மீட்டர் தொலைவிலிருக்கிறது. ஆகவேதான் பேராவூரணியில் கோர்ட் அமைக்க வேண்டுமென்று நீண்ட பல வருடங்களாக நாங்களே முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். சென்ற வருடம் 90-ல் அதை அமைத்திருக்கலாம். நான் காங்கிரஸ்காரனாக இருந்த காரணத்தினாலே

தான் அதை அமைக்க வில்லை என்பது நம்முடைய அமைச்சருடைய குறிப்பிலேயே தெரிகிறது. ஆகவே அதை நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் நீதி வழங்குகின்ற இந்த ஆட்சியில், பேராவூரணி மக்களுக்கும் நீதியை வழங்கி நீதிமன்றத்தை துவக்குவதற்கு நீங்கள் மீண்டும் மறு பரிசீலனை செய்வீர்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 149 திரு. வெ. தமிழரசு, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

149—ஆத்தூரில் நீதிமன்றம்.

* 1310 திரு. வெ. தமிழரசு,

திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம் ஆத்தூரில் சார்பு நீதி மன்றம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தற்போது உடனடியாக சப் கோர்ட் அமைக்கும் வரை வாரத்திற்கு ஒரு நாள் அல்லது இரு நாள் நீதிபதிகள் ஆத்தூருக்கு வந்து பணியாற்றும் வகையில் அமர்வு நீதி மன்றம் செயல்படுத்த நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் அரசு பரிசீலிக்குமா என்பதை பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூரில் அந்த நீதிமன்றம் அமைக்க ரூ. 9,02,000 தொடர் செலவும், ரூ. 3,75,000 தொடரா இனச் செலவும் தேவைப்படுகிறது. நிதி பிரச்சனை தான் அங்கே நீதி மன்றம் அமைப்பதற்குத் தடையாக இருக்கிறது. அதனையும் பரிசீலனை செய்து ஒரு நிரந்தர நீதிமன்றமே ஆத்தூரில் கொண்டுவர அரசு முயலும்.